தாய் மண்ணே வணக்கம்! தமிழ் மண்ணே வணக்கம்!!


மலர் - 15
இதழ் - 9
செப்டம்பர்-2016
விலை ரூ.7/-


KANKANIPPAALAN

# கண்காணிப்பாளன்

மாதஇதழ்

kkpnmagazine@gmail.com




சுதந்திர தின விழா மற்றும்
பொதுமக்கள் விஜிலன்ஸ் கவுன்சில் தமிழ்நாடு
இணையதள துவக்க விழா நிகழ்ச்சி

www.publicvigilancecounciltn.org



பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு - இணையதள துவக்க விழாவும், 70வது சுதந்திர தின விழாவும் சென்னை பாரதியார் இல்லத்தில் கடந்த 28.8.2016 அன்று நடைபெற்றது. அமைப்பின் தலைவர் லயன் மோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியை அமைப்பின் நிறுவனர் / செயலாளர் இ.செல்வராஜ் ஏற்பாடு செய்திருந்தார். இவ்விழாவில் மாண்புமிகு நீதியரசர் இ.பத்மநாபன் (ஓய்வு, சென்னை உயர்நீதிமன்றம்) அவர்கள் குத்துவிளக்கேற்றி, இணையதளத்தை துவக்கி வைத்தார். கே.மோகன், எம். பழனி, கே.எஸ். கணேஷ், சி.வி.ஆனந்தகுமார் ஆகியோர் வரவேற்று பேசினர். ஸ்.இ.தேவராஜிலு, எம்.ஆர். சுபாஷ்சந்திரபோஸ், கே. ஜெய்சங்கர், ஏ. குர்ஷித் பாஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் டாக்டர் வி. ரவிக்குமார், ஜெ.ஜெ. மோகன், எம். தாமோதரன் வழக்கறிஞர், டாக்டர் கடவுள் கண்ணன், டாக்டர் வி. சந்திரசேகர், வழக்கறிஞர் எஸ். சுஜாதா, ஆர். ஜெயவீரபாஸ்கரன், டாக்டர் ராஜ்குமார், டாக்டர் லட்சுமி ராஜாராம், ஏ.தா. இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிறைவாக அமைப்பின் பொருளாளர் ஏ.ராமையன் வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

# விவசாயிகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகள்

# 21 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் திட்டம்



முதல்வர் அறிவிப்பு

விவசாயிகளுக்கு சூரிய சக்தியால் இயங்கும் 10 குதிரை திறன் கொண்ட மோட்டார் பம்ப் செட்டுகளுக்கும் 80 சதவீத மானியம் வழங்கப்படும் என்பது உள்பட பல்வேறு சலுகைகளை சட்டசபையில் முதல்-அமைச்சர் அறிவித்தார்.

தமிழக சட்டசபையில் பேரவை விதி எண் 110-ன் கீழ் முதல்-அமைச்சர் வேளாண் துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

எங்களது தேர்தல் அறிக்கையில் ‘சூரிய சக்தியால் இயங்கும் விவசாய மோட்டார் பம்பு செட்டுகளுக்கு 80 சதவீத மானியம் தொடர்ந்து வழங்கப்படும். 10 குதிரைத் திறன் வரையிலான மோட்டார் பம்பு செட்டுகளுக்கு மானியம் வழங்கப்படும்’ என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். அதன்படி, இந்த ஆண்டு 10 குதிரை திறன் கொண்ட சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளுக்கு 80 சதவீதம் மானியம் வழங்கப்படும். 500 விவசாயிகள் பயன் அடையும் வகையில் 21 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இந்த ஆண்டு 60 முதல் 70 குதிரை திறன் கொண்ட 50 டிராக்டர்கள், அதற்கான இணைப்பு கருவிகள், 20 பலவகை கதிரடிக்கும் எந்திரங்கள், 10 சுழல் விசை துளை கருவிகள் ஆகிய வேளாண் எந்திரங்கள் 21 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படும்.

நெல் நடவு எந்திரங்கள், பவர் டில்லர், சுழற் கலப்பை, களையெடுக்கும் கருவிகள், டிராக்டர் மற்றும் பவர் டில்லரால் இயக்கப்படும் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் எந்திரங்களை விவசாயிகள் வாங்க நடப்பாண்டில், 31 கோடியே 6 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

எங்களது தேர்தல் அறிக்கையில், ‘மானாவாரி பயிர் சாகுபடியில் கறவை மாடுகள், ஆடுகள் வளர்ப்பு ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் மேலும் விரிவாக்கப்படும்’ என்ற வாக்குறுதியை அளித்திருந்தோம். அதனை செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு 21 கோடியே 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 20 ஆயிரத்து 55 ஏக்கர் மானாவாரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணைய முறை பரவலாக்கப்படும்.

வேளாண் சுற்றுச்சூழல் சார்ந்த ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகளை விவசாயிகள் பின்பற்றும் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இந்த திட்டம் 1,27,500 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 10 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

தொடர்ச்சி 17 பக்கம்






கவிப்போராளி கவிஞர் சுகுமாறன் அவர்கள் பணிநிறைவு பெற்றதை முன்னிட்டு புதுக்கோட்டை துரையரசன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.



கல்லூரி கல்வித்துறையில் 36 வருடங்களும், தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் 32 வருடங்களும் சிறப்பாக பணியாற்றிய கவிப்போராளி கவிஞர் சுகுமாறன் அவர்கள் பணிநிறைவு பெற்றதை முன்னிட்டு இரா.செந்தில்குமார் அவர்கள் (புதுக்கோட்டை கண்காணிப்பாளன் ரிப்போர்ட்டர்) பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

# பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் தனி கவனம் செலுத்த வேண்டும்

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் காவல் துறை, நீதித்துறையினர் தனி கவனம் செலுத்தி, அவர்களுக்கு உடனே நீதி கிடைக்க பாடுபட வேண்டும் என்று காவல்துறை - நீதித்துறை நடுவர்கள் இடையிலான கலந்தாய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

சென்னை பெருநகரக் காவல் துறை, பெருநகரக் குற்றவியல் நடுவர் கலந்தாய்வில், சென்னை பெருநகரக் காவல்துறை ஆணையர் டி.கே. ராஜேந்திரன், முதன்மை நீதித்துறை நடுவர் சந்திரன் வழங்கிய ஆலோசனைகள்.

காவல்துறை, நீதித்துறை இணைந்து பணியாற்றி, குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை பெற்றுத் தரவேண்டும். காவல்துறையினரின் பணிகள், சேவைகள் பொது மக்களுக்கு



நீதித்துறை நடுவர் மன்றம் இடையிலான 2016ம் ஆண்டுக்கான முதலாவது அரையாண்டு கலந்தாய்வுக் கூட்டம் எழும்பூரில் நடந்தது. இதில் சென்னை பெருநகரக் காவல்துறை ஆணையர் டி.கே. ராஜேந்திரன், கூடுதல் ஆணையாளர்கள் சி.ஸ்ரீதர் (வடக்கு) கே. சங்கர் (தெற்கு), அபய்குமார் சிங் (போக்குவரத்து), சு. அருணாச்சலம் (மத்திய குற்றப்பிரிவு), எஸ்.என். சேஷசாயி (தலைமையிடம்) மற்றும் இணை, துணை ஆணையர்கள் கலந்துகொண்டனர்.

நீதித்துறை சார்பில் முதன்மை பெருநகர நடுவர் சந்திரன், 5வது பெருநகர நடுவர் எம். ராஜா, 11-வது பெருநகர நடுவர் பிரகாஷ், அரசு வழக்கறிஞர்கள், கூடுதல் அரசு வழக்கறிஞர்கள், நீதித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை பெருநகரக் காவல் துறையில் நிலுவையில் உள்ள வழக்குகள், விசாரணைகள், தண்டனைகள் குறித்தும், நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிப்பது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது.

முழுமையாக கிடைக்கும் வகையிலும், அவர்களின் முழு நம்பிக்கையைப் பெறும் வகையிலும் பணியாற்ற வேண்டும். பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்ற வழக்குகளில் காவல் அதிகாரிகள் தனி கவனம் செலுத்தி, அவர்களுக்கு உடனே நீதி கிடைக்க பாடுபட வேண்டும்.

நிலுவை வழக்குகளை விரைந்து முடிப்பதில் இரு துறையினரும், தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். நிலுவை வழக்குகள், அதன் தன்மை குறித்து ஆலோசிக்க காவல்துறையில் மாதந்தோறும் கலந்தாய்வுகள் நடத்த வேண்டும். காவல்துறை அதிகாரிகள் அவ்வப்போது நீதித்துறையினருடன் இணைந்து, வழக்கு விசாரணைகள் குறித்து கலந்தாய்வு செய்து அறிவுரைகள், ஆலோசனைகள் பெறலாம்.

வழக்கு விசாரணை முறை, வழக்கை கையாள்வது தொடர்பாக உதவி ஆணையர்கள் தொடர்பாக உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்களுக்கு நீதித்துறை அலுவலர்கள் மூலம் திறன் மேம்பாட்டு

பயிற்சி வகுப்புகள் நடத்தப் படுகின்றன. போலீஸாரின் புலன்விசாரணை திறனை மேம்படுத்தும் விதமாக நடத்தப்படும் சிறப்பு வகுப்புகளில் நீதித்துறை அலுவலர்களும் பங்கு பெற்று கருத்துக்கள், ஆலோசனைகளைத் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் ஆலோசனை கூறினர்.

# பணிநிறைவு வாழ்த்து

**நமது கண்காணிப்பாளன் மாத இதழில் கவிதை படைத்துக் கொண்டிருக்கும் கவிஞர் கவிப்போராளி**

**க. சுகுமாறன் அவர்கள்**



**தமிழ்நாடு ஊர்க்காவல் படையில் கடந்த 32 வருடங்கள் சிறப்பாக பணியாற்றி, பணி நிறைவை பாராட்டி நமது கண்காணிப்பாளன் மாத இதழ் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.**

ஆசிரியர் மற்றும் நிர்வாகிகள்

கண்காணிப்பாளன் மாத இதழ்

**கண்காணிப்பாளன்**

**மாத இதழ் ஆண்டு சந்தா மற்றும் நன்கொடையாக - 100/-**
**கண்காணிப்பாளன் மாத இதழுக்கு காசோலையாகவோ, அல்லது பணமாகவோ அனுப்பி சந்தாரார்களாக சேருங்கள்**
**அனுப்ப வேண்டிய முகவரி**
**எண். 352, சாமந்திப்பு காலனி, வியாசர்பாடி, சென்னை - 39**

கண்காணிப்பாளன் மாத இதழ்

எண்.352, சாமந்திபூ காலனி,
வியாசர்பாடி, சென்னை – 600 039
செல் : 9444406321 , 9884199387

வங்கி விவரங்கள்


| | |
|---|---|
| வங்கி | – Purasawalkam Co-operative Bank Ltd |
| கிளை | – MKB Nagar |
| எண் | – 34103020000106 |
| கணக்கு | – Current Account |
| தலைப்பு | – Kankanippaalan |
| மின்னஞ்சல் | – kkpnmagazine@gmail.com |

# ஆக்கப்பணிகளும் முக்கிய நோக்கங்களும்

1. காவல் துறையுடன் இணைந்து இரவு ரோந்துப்பணி, போக்குவரத்து சீரமைப்புப் பணி, ஆகிய பணிகளை மேற்கொள்ளுதல்,
2. திருவிழாக்களின் போது காவல் துறையுடன் இணைந்து பாது காப்புப் பணியில் ஈடுபடுவது.
3. விழாக்காலங்களில் பக்தர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வரிசைப்படுத்தி, போக்குவரத்துச் சீரமைத்து இலவசமாகத் தண்ணீர் பாக்கட்டுகள், அன்னதானம் வழங்குதல்.
4. மாவட்டம் முழுவதும் கள்ளச்சாரயத்தை முற்றிலும் ஒழிப்பதற்குப் பிரச்சாரம் செய்தல்.
5. தேர்தல் நேரங்களில் மாவட்டம் முழுவதும் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுதல்.
6. சுதந்திரதினம், குடியரசுதினம் போன்ற தேசிய நிகழ்ச்சிகளில், தேச விரோதிகளை அடையாளம் கண்டறிந்து, விபத்தினைத் தடுக்கவும், பொது மக்களிடையே அறிக்கை, விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
7. குற்றங்களைத் தடுக்கவும், போக்குவரத்து விபத்தினைத் தடுக்கவும், பொது மக்களிடையே அறிக்கை, விளம்பரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
8. பெண்களைக் கேலி, கிண்டல் செய்தவர்களைக் கண்காணித்து அவர்களை நல்வழிப்படுத்துதல்.
9. இரவு நேர போக்குவரத்து விபத்தினைத் தடுக்க வாகன முகப்பு விளக்கின் மீது கருப்பு வண்ணம் பூசுதல்.
10. பண்டிகைகளின்போது விபத்துக்களைத் தடுக்க பொதுமக்களிடையே பத்தி ரிக்கை விளம்பரம், தொலைக்காட்சி மூலம், விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
11. போலியோ சொட்டுமருந்து முகாமை முன்னின்று நடத்துதல்.
12. அனைத்து பள்ளிகள், கல்லூரிகளில் போதை ஒழிப்பு விழிப்பு ணர்வு முகாம் நடத்துவதுடன், அதன் தீமைகளைக் குறித்து பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி நடத்தி ஊக்குவித்து, பரிசுகள் மற்றும் சான்றிதழ் களை வழங்குதல்.
13. பொதுமக்களிடையே தற்காப்பிற்காக இலவசமாக கராத்தே பயிற்சி, யோகா பயிற்சி அளித்தல்.
14. பெண்களுக்கு இலவச தையல் பயிற்சி அளித்து அரசு உதவிபெற ஆலோசனை வழங்குதல்.
15. படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு, கணினியுடன் அனைத்து சுயதொழில் பயிற்சி அளித்து சுய வேலைவாய்ப்பு தொழில் தொடங்க ஆலோசனை வழங்குதல்.
16. சுற்றுப்புற சூழல், சுகாதாரம் போன்றவைகளையும் இவற்றினால் ஏற்படக்கூடிய நன்மைகளையும், தீமைகளையும் பொது மக்களுக்கு எடுத்துரைத்தல்.
17. மருத்துவ வசதிகள் இல்லாத கிராமம் மற்றும் நகர்புறங்களில் மருத்துவ முகாம் நடத்தி கூடுமானவரையில் இலவசமாக மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துகள் வழங்குதல்.
18. ஏழை – எளிய ஆதரவற்ற குழந்தைகளுக்கு படிக்க உதவி செய்தல்.
19. வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்ற மக்களையும், தீ விபத்தினால் பாதிக்கப்படுகின்றவர்களையும் காவல் துறை மற்றும் தீ அணைப்பு துறையுடன் இணைந்து காப்பாற்றி உதவி புரிதல்.
20. விதவைகளின் மறுவாழ்விற்கும் அவர்களின் முன்னேற்றத் திற்கும் உதவி புரிதல்.
21. குடும்ப நல திட்டத்தையும், வரதட்சணை ஒழிப்பு திட்டத் தையும் தீவிரமாக அமல் செய்து மக்கள் நலம்பெற உதவி செய்தல்.
22. கண்தானம், ரத்ததானம் போன்றவைகள் செய்தல் மற்றும் முகாம்கள் நடத்தி அதற்கான உறுப்பினர்களை சேர்க்கும் திட்டத்தை தீவிரப்படுத்தல்.
23. ஜாதிமத, இன வேறுபாடுகளை ஒழித்து மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்.
24. ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவிகள் மற்றும் உடைகள் வழங்குதல்.
25. அத்தியாவசியப் பொருட்களை பதுக்கல் செய்வோரையும், உணவு பொருள்களின் கலப்படம் செய்வோரையும் அளவு களில் சரியான முறையில் விநியோகம் செய்யாதவர்களையும் கண்காணித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் காவல் துறைக்கும் தெரிவிப்பது.
26. நல்ல சமூக உறவாக மனித ஒற்றுமை, தேச ஒற்றுமை ஆகியவற் றிற்காக பாடுபடும் தலைவர்களையும், விளையாட்டு துறையில் வெற்றிபெறும் வீரர்களையும் கௌரவித்தல்.
27. மத்திய மாநில அரசுகள் மக்களுக்கு அறிவிக்கின்ற சலுகைகளை விளம்பரப்படுத்துதல்.
28. அரசு மருத்துவமனைகள் மற்றும் ரயில்வே ஸ்டேஷன் கூட்ட நெரிசல்களைக் கட்டுப்படுத்த உதவி புரிதல்.
29. செடி, மரக் கன்றுகள் வைத்து இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்.
30. அரசு போட்டித் தேர்வுகளுக்குத் தேவையான இலவசப் பயிற்சி வகுப்புகளை நடத்தி ஆலோசனைகள் வழங்குதல்.
31. மாவட்ட விளையாட்டு சங்கத்துடன் இணைந்து விளை யாட்டை ஊக்குவித்து பரிசுகளை வழங்குதல்.
32. மழைநீர் சேகரிப்புக் குறித்து பிரச்சாரம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

# இளைஞர்களே! இலட்சியக் கனவு காணுங்கள்

கனவுகளில் பல விதங்கள் உண்டு. சாதாரணமாக ஒருவர் தூங்கியபின் அவருடைய தனிப்பட்ட சுய இன்பங்களுக்காக காண்பது சரியான கனவு அல்ல. வாழ்க்கையில் இலட்சிய கனவு காணவேண்டும். அறிவியல் மாமேதை, இந்திய முன்னாள் ஜனாதிபதி ஐயா அப்துல் கலாம் அவர்கள் கூறியதுபோல, விழித்துக் கொண்டே கனவு காணுங்கள். அவர் விழித்துக் கொண்டே நாட்டை எப்படி உயர்த்தலாம், மற்றவர்களுக்கு எப்படி முன் மாதிரியாக இருக்கலாம், அறிவியல் துறையில் இந்தியாவை எப்படி முன்னேற்றலாம், இந்தியா வல்லரசு நாடாக என்ன செய்யலாம், என்ற கனவு அவர் கண்டதால்தான் அவர் வாழ்க்கையில் எல்லோராலும் பாராட்டப்பட்டு பல சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆனார். அவரது தாரக மந்திரம் இளைஞர்களே இலட்சியக் கனவு காணுங்கள், உங்களுடைய கனவின் பயன் எல்லோருக்கும் பயன்பட வேண்டும், உங்களால் இந்தியா முன்னேற வேண்டும். அதற்காக கனவு காணுங்கள். அந்த கனவின் பயன் எல்லோருக்கும் பயன்படும். உங்களுக்கும், அதனால் பெருமை ஏற்படும் என்றார்.



**இ. ராஜகோபாலன்**, எம்.ஏ.,
டெபுடி ஏரியா கமாண்டர் (ஓய்வு)
(சென்னை ஊர்க்காவல் படை)
ஆலோசகர்
பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில், தமிழ்நாடு

நல்கனவு காண வேண்டும். அந்த கனவு மெய்ப்பட வேண்டும். அந்த நாளில் வெள்ளையர்களால் அடிமைப்பட்டு கிடந்த இந்தியாவை அடிமை விலங்கிலிருந்து மீட்டு சுதந்திர இந்தியாவாக மாற்ற சுப்பிரமணிய பாரதி அவர்கள் பல நாட்டு பற்று பாடல்களைப் பாடி இந்திய இளைஞர்களை வீறுகொண்டு எழுச்செய்தார். 'என்று தனியும் இந்த சுதந்திர தாகம்' என்று சுதந்திர தாகத்தை மக்களுக்கு ஏற்படுத்தினார்.

வீரபாண்டிய கட்டபொம்மன், வ.உ.சி. சிதம்பரனார், திலகர், வாஞ்சிநாதன் போன்ற எண்ணற்ற தியாகிகளால், பல சுதந்திர போராட்ட தியாகிகளின் கடுமையான உழைப்பின் காரணமாக, பலனாக இந்தியா பின்னர் சுதந்திரம் அடைந்தது. எதை செய்தாலும் அதற்கு தூண்டுகோல் ஒன்று தேவை. ஒரு மனிதனை உத்வேகத்துடன் செயல்பட செய்வது தூண்டுகோள்தான். அப்படி அந்த தலைவர்கள் நாட்டுக்காக செய்த பல தியாகங்களின் மூலம் தான் இன்று நாம் சுதந்திர பறவையாக உலா வருகிறோம். "நாடு உனக்கு என்ன செய்தது கருதாமல், நாட்டுக்கு நீ என்ன செய்தாய்" என்ற பேரறிஞர் அண்ணாவின் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுத்து இன்றைய இளைஞர்கள் தங்களுடைய வாழ்க்கை செம்மை படுத்த வேண்டும். செயல்பட வேண்டும். வந்து பிறந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்று இராமல், பிறந்தோம், நம்மால் மற்றவர்களுக்கு பல நன்மைகள் செய்தோம் என்று இருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் அடிப்படை தியாக எண்ணம், இருந்தால் நிச்சயம் ஒரு மனிதன் எல்லோராலும் போற்றப்படுவான். முதியவர்கள் இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும். வாழ்க்கையின் தத்துவங்களை, அவர்களுக்கு நல்வழியில் எடுத்துகூற வேண்டும். முதலில் அவர்கள் சரியான முறையில் வாழ்ந்து காட்ட வேண்டும். பல பெரிய தலைவர்

களின் தியாகங்களினால் இந்தியா உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கிறது. சிறந்த வல்லரசு நாடாக ஆகும் நிலையில் உள்ளது. பொதுவாக இந்திய இளைஞர்களுக்கு உலக அரங்கில் நல்ல வரவேற்பு உள்ளது. இந்தியர்கள் திறமைச்சாலிகள், ஞானம் மிகுந்தவர்கள், கடுமையான உழைப்பாளிகள் என்ற எண்ணம் உலக நாடுகளின் பார்வையில் உள்ளது. அத்தகைய எண்ணங்களை தக்க வைத்து அதனால் அவர்களும் உயர்ந்து நாட்டையும் உயர்த்துவது ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். உழைப்பின் வாரா உறுதிகள் உளவே.

நமது தேசப்பிதா மகாத்மா காந்தி அடிகள் அவர்கள் நமக்கு வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரம் வாங்கி தருவதற்காக அகிம்சை முறையில் போராடி அவர் பல துன்பங்களை அனுபவித்து நமக்கு சுதந்திரம் வாங்கி தந்தார். மகாத்மா காந்தி அடிகள் வெள்ளையர்களால் பெரிதும் அவமான படுத்தப்பட்டார். அவரின் அகிம்சை முறை போராட்டத்திற்கு வெள்ளையர்கள் அடி பணிந்து 1947 ஆகஸ்ட் 15ம் தேதி இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுத்தனர். இவ்வாறு கஷ்டப்பட்டு பெற்ற சுதந்திரத்தை இளைஞர்களே நீங்கள் சரியாக பயன்படுத்த வேண்டும். உலக அரங்கில் இந்தியா வல்லரசு ஆக இந்தியர்கள் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும். அறிவியல் துறையில் பல தலைவர்கள உருவானார்கள். அவர்களில் முக்கியமானவர் நமது அறிவியல் மாமேதை, முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஆவார். அவர் இந்திய இளைஞர்களுக்கு முன்னேற்றத்திற்கான அனைத்து அறிவுரைகளையும் வழங்கினார். பல தியாகிகளின் உழைப்பால் இன்று இந்தியா உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கிறது. ஒவ்வொரு இந்தியனும், அவரவரின் கடமைகளை சரியாக செய்ய வேண்டும். இதுதான் நாம் நமது தேச தலைவர்களுக்கு செய்யும் நன்றி ஆகும். எல்லோரும் எல்லாம் பெற வேண்டும் வாழ்க இந்தியா. வளர்க இந்திய மக்கள்.

## மகளிர் சுய உதவிக்குழு கவிதை

ஒன்றிணைவோம்! ஒன்றிணைவோம்
நாம் அனைவரும் ஒன்றிணைவோம்
எழுச்சி பெறுவோம்! எழுச்சி பெறுவோம்
நம் வளம் பெறவே எழுச்சி பெறுவோம்

அன்று காசில்லாமல் கலங்கி நின்றோம்
கஞ்சி குடிக்க வழியின்று வாடி நின்றோம்
இன்று கடலில் மூழ்கும் கந்துவட்டி இல்லை
கண்ணீர் குடிக்கும் கட்ட பஞ்சாயத்தில்லை

எளிய தவணைமுறையில் கடன் கண்டோம் - இன்று
பலகோடி பலன் கண்டோம்
ஊர் கூடி தேர் இழுப்போம் - நாளை
பார் போற்றும் சாதனை காண்போம்

வீணே செலவாகும் நம் பணத்தை சேமிப்போம் - நாளை
சிரமமின்றி தொழில் செய்து சிகரத்தை அடைவோம்
வாழ்க! வாழ்க! வாழ்கவே! நம் ஒற்றுமை வாழ்கவே!
வளர்க! வளர்க! வளர்கவே! நம் கூட்டமைப்பு வளர்கவே!



**எம். கமலா** CLL
CHATVT
ராஜீவ்காந்தி நகர்
காலடிப்பேட்டை

# கிராமத்தைத் தேடி

*நகர வாழ்க்கை வெறுத்துப்போச்சு*
*நாகரீகம் பெருத்துப்போச்சு*
*நல்லவை சிறுத்துப்போச்சு*
*நம்பிக்கையும் பொய்யாச்சு*

*பண்பாடு மறைஞ்சு போச்சு*
*பாகுபாடு வளர்ந்து போச்சு*
*கண்ணியம் தொலைஞ்சு போச்சு*
*கலாச்சாரம் தேய்ஞ்சு போச்சு*

*வாகனங்கள் கூடிப்போச்சு*
*வழி விபத்து அதிகமாச்சு*
*மருத்துவமும் வர்த்தகமாச்சு*
*மானிட உயிர் மலிவாச்சு*

*சத்தம் நிறைஞ்சு போச்சு*
*சுத்தம் குறைஞ்சு போச்சு*
*குற்றம் பெருகிப்போச்சு*
*சுற்றமும் சுருங்கிப்போச்சு*

*இயற்கையை மறந்தாச்சு*
*செயற்கையே உயிராச்சு*
*மனசாட்சி உறங்கிடுச்சு*
*மனிதநேயம் மடிஞ்சிடுச்சு*

*நகரம் நாடி வந்ததற்கு*
*நல்ல பலன் கண்டாச்சு*
*நாம்பிறந்த மண் தேடி*
*நகரும் நிலை வந்துடுச்சு*




கவிப்போராளி **க.சுகுமாறன்**
4031, பொன் நகர்,
அசோக் நகர் விரிவாக்கம்,
திருக்கட்டளை அஞ்சல்,
புதுக்கோட்டை - 622 303
அலைசெல்: 9443867387, 9486954801



# கண்காணிப்பாளன்

ஆசிரியர் : **இ.செல்வராஜ்**
முதன்மை காப்பாளர்
**P. ரேணுகோபால் I.A.S.** ஓய்வு
கௌர ஆசிரியர்
**M.D. இளங்கோவன்** தாசில்தார் ஓய்வு
மருத்துவ கௌரவ ஆலோசகர்
பேரா.டாக்டர் **முத்துச் செல்லக்குமார்**
M.D.,(Int. Med.) DPSM, Dip.inDiabet, FRSH,FCGP,FIACM,FIMSA
சட்ட ஆலோசகர்கள்
**M. தாமோதரன்**
Senior-Cent. Govt. Standing Cousel
**S, ஜேம்ஸ் ஜெகநாதன்**, M.A.,M.L.
பூவை. **இலா. ரமேஷ்** B.A., B.L.
ஆசிரியர் குழு
**A. ராமையன்**
**S. சாகுல்ஹமீது**
**S. வேல்முருகன்**
**S. ரவிச்சந்திரன்**
**T.S. ராம்குமார்**
நிருபர்கள் :
**S. முஹம்மது ரபீக், J.திலக்குமார்**
**P.N. ராஜா, S. அப்துல் அஜிஸ்,**
**A.P. செல்வம், S. தங்கதுமார்**
**C.P.செந்தில்குமார், S.முஹம்மது ஷரிப்**
**S.அப்துல்ரகுமான், N. வெங்கடேசன்**
**B.கோட்டீஸ்வரன், V. கிஷோர்,**
**ஐய்யப்பன், R.ரகோத்தம்மன்**
**S.சௌந்தர்ராஜன்,** சேலம்
**G.செந்திதில்குமார்** புதுக்கோட்டை
**P.K.குமார், M. ஜானகிராமன்**
**K.ஐய்யனார்,**
**S. சங்கீதா**
**S.கிருஷ்ணமூர்த்தி, P.சிவசங்கர்**
புகைப்பட நிருபர் : **அ.முத்து**
வடிவமைப்பு
சீயோன் கிராஃபிக்ஸ்-9884571053

எண்.352, சாமந்திபுரம், வியாசர்பாடி,
சென்னை – 39. செல் : 9444406321



கண்காணிப்பாளன் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.

# அறிஞர் அண்ணா

தமிழக அரசியல் களத்தில் திராவிட இயக்கத்தை வலுவான சக்தியாக உருவாக்கியவரும், அறிஞர் அண்ணா என பாசத்தோடு அழைக்கப்பட்டவருமான சி.என். அண்ணாதுரை அவர்கள் பிறந்த நாள் செப்டம்பர் 15

காஞ்சிபுரத்தில் நடுத்தர நெசவாளர் குடும்பத்தில் (1909) பிறந்தார். சென்னை பச்சையப்பா உயர்நிலைப் பள்ளியில் படிப்பைத் தொடங்கினார். குடும்ப சூழல் காரணமாக படிப்பை நிறுத்திவிட்டு, காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில் குமாஸ்தாவாக பணிபுரிந்தார்.

பச்சையப்பன் கல்லூரியில் பட்டப்படிப்பை பயின்றார். 1934 ல் பி.ஏ. (ஹானர்ஸ்) பட்டமும், பிறகு பொருளாதாரம் மற்றும் அரசியலில் முதுகலைப் பட்டமும் பெற்றார். பயின்ற பள்ளியிலேயே சிறிது காலம் ஆசிரியராக வேலை பார்த்தார்.

பெரியாரின் கொள்கைக ளால் ஈர்க்கப்பட்டவர், திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். அரசியல் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். தி.க.வின் விடுதலை பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றினார். பெரியாருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், தி.க.வில் இருந்து விலகி 1949 ல் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்தார். திராவிட நாடு இதழையும் தொடங்கினார்.

எழுத்துப் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டார். திரைப்படங்களுக்கு கதை, வசனம் எழுதினார். இவரது நல்ல தம்பி என்ற கதை 1948 ல் திரைப்படமாக தயாரிக்கப்பட்டது. தொடர்ந்து வேலைக்காரி, ஓர் இரவு ரங்கோன் ராதா, பணத்தோட்டம், குமரிக்கோட்டம், ராஜபார்ட் ரங்க துரை ஆகிய நாவல்கள் திரைப்படங்களாகின.

நாவல்கள், சிறுகதைகள், அரசியல் சார்ந்த முற்போக்கு சீர்திருத்த நாடகங்கள், மேடை நாடகங்கள் எழுதியுள்ளார். சொந்த நாடகங்களில் நடித்தும் உள்ளார். இவரது சொல்லாற்றலும், எழுத்தாற்றலும் அனைத்து தரப்பினரையும் கவர்ந்தன. மணக்கணக்கில் அடுக்கு



மொழியில் மடைதிறந்தாற்போல பேசுவதில் வல்லவர்.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கை கொண்டவர். மூட நம்பிக்கைகளை எதிர்த்தவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதை கட்சியின் முக்கிய கொள்கை முழக்கமாக முன்மொழிந்தார்.

இந்தித் திணிப்பை எதிர்த்து சென்னையில் 1960 ல் இவரது தலைமையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நடந்தது. 1965 ல் தமிழகம் முழுவதும் இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிர மடைந்தனர். இதன் விளைவாக, இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆட்சி மொழியாக ஆங்கிலமே நீடிக்கும் என அரசியல் சட்டம் திருத்தப்பட்டது.

மாநிலங்களவை உறுப்பினராக 1962 ல் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1967 ல் நடைபெற்ற தமிழக சட்டப்பேரவைத் தேர்த லில் திமுக மகத்தான வெற்றி பெற்று முதல்வரானார்.

சுயமரியாதை திருமணங் களை சட்டப்பூர்வமாக்கினார். மதறாஸ் மாநிலம் என்ற பெயரை தமிழ்நாடு என மாற்றினார். தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையை அமலப்டுத்தினார்.

அரசியல் களத்தில் புதிய வரலாறு படைத்த சி.என்.அண்ணா துரை புற்று நோயால் பாதிக்கப்பட்டு 59 வது வயதில் (1969) மறைந்தார். இறுதிச் சடங்கில் சுமார் ஒன்றரை கோடி மக்கள் கலந்து கொண்டனர்.

# வாஸ்து சாஸ்திரம்

**வீடு கட்ட நல்லநாள் தேர்ந்தெடுத்தல்**

தற்போது நல்ல மனையை வாங்கியவுடன் ஒரு நல்ல நாளில் நமது வீட்டின் பாலக்கால் போட வேண்டும் அல்லவா? அதைத் தேர்ந்தெடுப்பது எப்படி என்று சுருக்கமாகப் பார்ப்போம்.

1. தேர்ந்தெடுக்கும் நாள் வீட்டுத் தலைவனுக்கோ தலைவிக்கோ சந்திராஷ்ட நாளாக அமையக்கூடாது.
2 வீட்டுத் தலைவனுக்குத் தாராபலம் நிறைந்த நாளாக இருக்க வேண்டும். அதாவது ஜென்ம நட்சத்திரத்திலிருந்து 2, 4, 6, 8 ஆகிய நட்சத்திரங்கள் சிறந்தது.
3. சுக்கிரன் உச்சம் பெற்று இலக்னத்திலும், குரு உச்சம் பெற்று நான்காம் இடத்திலும், சனி உச்சம் பெற்று 11 லும் இருக்கும் போது துவங்கப் பெற்ற வீடு ஆயிரம் ஆண்டுகள் சிறப்பாக விளங்கும்.
4. குரு, சுக்கிரன் அஸ்தமனம் கூடாது அஸ்தங்கமும் கூடாது. குரு, சுக்கிரன் ஆகிய இரு முக்கிய கிரகங்களும் பால்யம் மற்றும் கிழட்டுத் தன்மை பெற்றுள்ள போதும் ஆரம்பிக்கக் கூடாது.
5. குழந்தை பிறந்த தீட்டு உள்ள போதும் நெருங்கிய உறவினர் தீட்டுள்ள கருவுற்றிருக்கும் போதும் வீடு கட்டத் துவங்கக் கூடாது.
6. சூரிய, சந்திர கிரகண காலத்தின் முன் ஏழு நாட்களும், பின் ஏழு நாட்களும் செய்யக் கூடாது.

வீடு கட்ட ஆரம்பிக்கும் மாதங்கள் : வைகாசி, ஆவணி, கார்த்திகை, மற்றும் மாசி மாதங்கள் சிறந்தவை.

திதிகள் : வளர்பிறை ஏற்றது. தேய்பிறையிலும் நல்ல திதிகள் தோஷமில்லை. திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, திரயோதசி, பௌர்ணமி ஆகியவை சிறந்தவை.

**நட்சத்திரங்கள் :** அஸ்வினி, மிருகசீரிசம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுசம், உத்திராடம், திருவோணம், சதயம், ரேவதி ஆகிய நட்சத்திரங்களும் சிறந்தவை.

**நாட்கள் :** புதன், வியாழன், வெள்ளி, ஆகிய நாட்களில் ஆரம்பிக்க உத்தமம், திங்கட்கிழமை கூடாது.





Er. G. செந்தில்குமார்
ஸ்ரீராகவேந்திரா பில்டர்ஸ்
புதுக்கோட்டை,
செல் : 9443401807

அருசுவை உணவே அருமருந்து

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்



**எஸ். கிருஷ்ணமூர்த்தி**
எண்.251, கல்யாணி இல்லம்,
செல்லப்பன் நகர்,
புதுக்கோட்டை - 622 001
செல் : 98428 51746

## பாதுகாப்பான உணவு

நாம் உட்கொள்ளும் உணவு தான் நமது உடலுக்கு சக்தியை கொடுக்கிறது. சுகாதாரமான, சுத்தமான உணவுகளின் மூலமே நோய் தொற்று ஏற்படாமல் உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது. மாறி வரும் கால சூழ்நிலையில் அவசரம் மட்டுமே மனிதன் காட்டுகிறான். நிதானம் தவறுகிறான். அவசர கதியில் சுற்றுச்சூழல் பார்க்காமல் ஈ மொய்த்த பண்டங்களையும், தூசிகள் நிறைந்த மாசுபட்ட உணவுகளையும் சாப்பிடும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறான். அதனால் நோய் தொற்று ஏற்பட்டு பலவித உடல் பாதிப்புக்கு ஆளாகிறான். இந்நிலை முற்றிலும் மாற வேண்டும். வேலை வாய்ப்பு இல்லாமல் பிழைக்கும் வழியாக சாலை ஓரக்கடைகள் போட்டு வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளும் பிழைக்க வேண்டும். தவறில்லை. ஆனால் அவர்கள் மூடி வைத்த உணவு பண்டங்களை வழங்க வேண்டும். மிதமான சூட்டிலாவது தின்பண்டங்கள் உட்கொண்டால் மட்டுமே நோய் தொற்றுகள் வராமல் பார்த்துக் கொள்ள முடியும். வயிற்றுப் போக்கு, காய்ச்சல், மூச்சிறைப்பு போன்ற சுவாசத் தொற்றுகள் வருவதற்கு திறந்த வெளியில் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் ஈ மொய்த்த, காற்று, தூசியால் மாசுபட்ட உணவுகளை உட்கொள்வதால் மட்டுமே ஏற்படுகிறது. வியாபாரிகளும் மாசுபட்ட உணவுகளை வழங்கவும் வேண்டாம்.

உணவு உட்கொள்ளும்போது கை, கால், கழுவி தூய உணவாக உட்கொள்வது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் தொற்றுக்கு எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுகள் உட்கொள்ள வேண்டும், காய்ச்சல் என்றாலே சுடுகஞ்சிதான் சிறந்த உணவு. காரம், புளிப்பு குறைந்த உணவும் எடுத்துக் கொள்ளலாம். பார்லி அரிசிக் கஞ்சி காய்ச்சலுக்கு மிகச் சிறந்த உணவு. வருமுன் காப்பது தான் மிகவும் சிறந்தது. நோய்த் தொற்றுகள் வந்தபின் என்பது இக்காலத்தில் அவ்வளவு எளிதான காரியம் இல்லை. நோய்கள் பாதிப்பு இல்லாமல் வாழ்வதற்கு உணவுதான் சிறந்த சிறந்த மருந்து. உணவு பாதுகாப்பிற்கு முக்கியம் கொடுத்து சிறந்த சத்துள்ள சுற்றுச் சூழலில் பாதிக்காத உணவுகள் உண்ணவும், மிதமான சூட்டுடன் கூடிய நன்கு வெந்த உணவுகள் உண்ணவும், பழைய எண்ணெயில் பொறித்த, வறுத்த உணவுகள் உட்கொள்ளாமல் இருப்பதும் உடல் நலத்திற்கு பாதுகாப்பானது. சாலை ஓரங்களில் சாப்பிடும் சூழ்நிலை ஏற்பட்டால் மூடி வைத்திருக்கும், ஆறிப்போகாத, ஈக்கள் மொய்க்காத உணவு பண்டங்களாகப் பார்த்து உட்கொள்ளுங்கள். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடியும். ஆரோக்கியமான உடல் இருந்தால் தான் அகிலத்தில் நோய் தொற்று பாதிக்காமல் வாழ்வதற்கு முடியும். பாதுகாப்பான, சுகாதாரமான உணவு தாங்க மருந்து.

குறிப்பு : கீரைகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை நல்ல தண்ணீரில் நன்கு சுத்தம் செய்தபின் பயன் படுத்துங்கள். பூச்சி மருந்துகள், தூசிகள் போன்ற பாதிப்புகள் இருக்காது.

# டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

சென்னையில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாநகராட்சி தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

சென்னை உள்ள சுமார் 17 லட்சம் வீடுகளின் பகுதிகள் சிறு வட்டங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டத்துக்கும் சுமார் 500 வீடுகள் கொண்ட தெருக்களில் வாரந் தோறும் தொட்டிகள், கிணறுகள் உள்ளிட்ட இடங்களில் கொசுப் புழுக் கள் இருப்பின் அதனை மாநகராட்சி ஊழியர்கள் அழித்து வருகின்றனர். மேலும் குடிசைப்பகுதிகள், பள்ளிகள், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் மழைநீர் வடிகால் கால்வாய்களில் 42 வாகனங்களில் பெரிய புகைப்பரப்பும் இயந் திரங்களை கொண்டும் கையினால் எடுத்துச்செல்லும் புகைபரப்பும் இயந்திரங்களை கொண்டும் கொசுப் புழு மற்றும் முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

இந்திய மருத்துவ முறை பாரம் பரிய மருத்துகளான நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு மற்றும் மலை வேம்பு இலைச்சாறு போன்றவை அம்மா உணவகங்களி லும், ஆரம்ப சுகாதார நிலையங்க ளிலும், பள்ளிகள் மற்றும் மருத்துவ முகாம்களிலும் இலவசமாக வழங்கப்பட்டுவருகிறது.

காய்ச்சல் பாதிப்பு அதிக முள்ள இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு உரிய சிகிச் சைகள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு டெங்கு காய்ச்சல் பற்றியும், ஏடிஸ் கொசு உற்பத்தி பற்றியும், அதைத் தடுக்கும் வழிமுறைகள் மற்றும் விழிப்புணர்வு குறித்தும் துண்டு பிரசுரங்கள் மற்றும் துண்டறிக்கைகள் விநியோகிக்கப் பட்டுள்ளன. மேலும், மழைக் காலங்களில் வரக்கூடிய நோய்களை எதிர்கொள்ள போதிய அளவு மருந்து கள், உபகரணங்களுடன் சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறை பணியாளர்கள் தயார் நிலையில் உள்ளனர்.




காய்ச்சல் அனைத்தும் டெங்கு காய்ச்சல் அல்ல. எனவே, காய்ச்சல் இருந்தால் உரிய மருத்துவர் களிடமும், அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவ மனைகளிலும் சென்று உரிய சிகிச்சை பெற அறிவுறுத்தப்படுகிறது. இதுதவிர, அரசு மருத்துவ மனைக ளிலும், குறிப்பிட்ட தனியார் மருத்துவ மனைகளிலும் டெங்கு காய்ச்சல் என உறுதிப் படுத்தக்கூடிய எலிசா பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது. எனவே, பொதுமக்கள் டெங்கு காய்ச்சல் குறித்து அச்சம் கொள்ள வேண்டாம். இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிகள் தொடக்கம்

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

2017ம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தப் பணிகள் தொடங்கவுள்ளன. இதற்கான கால அட்டவணை வெளியிடப்படுகிறது. அதன் படி, வரைவு வாக்காளர் பட்டியல் 1.9.16 அன்று வெளியிடப்படும்.

அன்றுமுதல் 30ந் தேதி வரையில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க - நீக்க, அல்லது திருத்த மனுக்கள் அளிக்கலாம். மனுக்கள் பெறுவதற்காக 11 மற்றும் 25 ஆகிய ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.



வரைவு வாக்காளர் பட்டியலை தலைமைத் தேர்தல் அதிகாரியின் www.elections.tn.gov.in என்ற வலைதளத்தில் காணலாம். 10 மற்றும் 24 ந் தேதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர்கள் சரிபார்க்கப்படும். வாக்காளர்கள் தங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா? என்பதை சரிபாத்துக் கொள்ள வேண்டும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்புகிறவர் 1.1.17 அன்று 18 வயது நிரம்பியவராக இருந்தல் வேண்டும். புகைப்பட வாக்காளர் பட்டியல்கள், வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி அதிகாரிகளின் அலுவலகலங்களில் பார்வைக்கு வைக்கப்படும். வருவாய் கோட்டாட்சியர், நகராட்சி ஆணையர், வட்டாட்சியர் ஆகியோரின் அலுவலகங்களிலும், வாக்குச்சாவடி அமைவிடங்களிலும், மாநகராட்சி மண்டல அலுவலங்களிலும் அவற்றை வாக்காளர்கள் பார்க்கலாம்.

முதல்முறையாக பெயர் சேர்க்க, அல்லது ஒரு சட்டமன்ற தொகுயிலிருந்து மற்றொரு சட்டமன்ற தொகுக்கு வசிப்பிடம் மாறியிருந்தால்படிவம் 6 ன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். வெளி நாட்டில் வசிக்கும் இந்திய குடிமக்கள் பெயர் சேர்க்க 6 ஏ படிவத்தையும், ஒரு சட்டமன்றத் தொகுக்குள்ளேயே வசிப்பிடம் மாறியிருந்தால் 8 ஏ படிவத்தையும், பெயரை நீக்க வேண்டுமானால் படிவம் 7 ஐயும் பயன்படுத்த வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர், வயது, பாலினம், உறவு முறை போன்றவற்றில் திருத்தம் அல்லது சரியான புகைப் படம் இடம் பெறச் செய்வதற்கு படிவம் 8 ஐ பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும். படிவங்களை நிர்ணயிக்கப்பட்ட அலுவலகங்களில் இருந்து பெறலாம். இணைய தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நிரப்பப்பட்ட விண்ணப்பங்களை நிர்ணயிக்கப்பட்ட அமைவிடம் வாக்குச்சாவடி நிலை அலுவலர், உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அல்லது வாக்காளர் பதிவு அதிகாரி ஆகியோரிடம் அளிக்கலாம். இணையதள முகவரியிலும் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

முதன்முறையாக விண்ணப்பிப்போரைத் தவிர மற்ற மனுதாரர்கள் அவர்களுடைய முந்தைய முகவரியையும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண்ணையும் படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

இருப்பிட மாற்றம்

செய்யமலிருந்தாலும்கூட, தற்போதைய முகவரியில் எத்தனை ஆண்டுகளாக தொடர்ந்து வசித்து வருகிறார் என்பதையும், முன்பு பெயர் சேர்க்கப்பட விண்ணப்பிக்க இயல வில்லை என்பதையும் அல்லது தற்போதைய வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளது என்றும் குறிப்பிட வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றிருந்து, ஆனால் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தொலைந்திருந்தால், வட்டாட்சியர் அல்லது மண்டல அலுவலகத்தில் படிவம் 1 ல் புதிய அட்டை வழங்கக்கோரி எப்போதும் விண்ணப்பிக்கலாம். வாக்காளர் பட்டியலில் ஒரிடத்திற்கு மேல் பெயரை பதிவு செய்ய முயன்றால் அல்லது தவறான தகவல்களை தருகிற எந்த ஒரு நபரும் குற்ற நடவடிக்கைக்கு உள்ளாவார்.

வெளி நாட்டில் வாழும் இந்திய குடிமக்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் படிவம் 6ஏ ஐ நேரிலோ, தபால் மூலமோ அளிக்க வேண்டும். அதனுடன் விண்ணப்பதாரரின் புகைப்படம், ஏனைய பிற விவரங்களுடன் விசாவின் செல்திறன் பற்றிய மேற்குறிப்பு அடங்கிய பாஸ் போர்ட்டின் தொடர்புடைய பக்கங் களின் நகலையும் சேர்த்து அளிக்க வேண்டும். படிவம் 6ஏ ஐ தபாலில் அனுப்பும்போது பாஸ்போர்ட்டின் நகல்கள் சுய சான்றொப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்.

அளிக்கப்பட்டுள்ள தகவல் கள் குறித்து வீடுகளுக்குச் சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர் விசா ரணை மேற்கொள்வர். கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகளின் பட்டியல் தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளத்தில் வெளியிடப்படும். ஆட்சேபனை ஏதாவது இருந்தால், அப்பட்டியலை அடிப்படையாக கொண்டு, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரியிடம் தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



சமூக சேவை செய்தமைக்காக - திருநங்கை டி.விஜி, (வி.டி.என்.எஸ்.) செயலாளர் அவர்களுக்கு, தமிழக மக்கள் முரசு செய்தி ஆசிரியர் மா. வாசுதேவன் அவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவில் எச்-8 காவல் நிலைய ஆய்வாளர் திரு. டி.பிரகாஷ் கலந்துகொண்டார்.

## 3ம் பக்க தொடர்ச்சி

உயர் மதிப்புள்ள குடை மிளகாய், வெள்ளரி, தக்காளி இவற்றுடன் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கொய் மலர்களான ஜெர்பரா, ரோஜா, கார்னேஷன் மற்றும் லில்லியம் போன்ற தோட்டக்கலைப் பயிர்கள் பசுமைக் குடில்களில் பயிரிடப்படுகின்றன. நடப்பாண்டில் இத்திட்டம் 3 லட்சத்து 50 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில், 16 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும்.

கடலூர் மாவட்டம் - விருத்தாச்சலம், காஞ்சீபுரம் மாவட்டம் - மேல்கதிர்ப்பூர், திருச்சி மாவட்டம் - முதலைப்பட்டி, நாமக்கல் மாவட்டம் - படச்சோலை, வேலூர் மாவட்டம் - நவ்லாக் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் - சந்தையூர் ஆகிய 6 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் 5 கோடியே 83 லட்சம் ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும்.

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தோட்டக்கலை நடவு செடிகளை, தங்களது சொந்த மாவட்டங்களிலேயே பெற்றுக் கொள்ள வகை செய்யும் விதமாக 5 மாவட்டங்களில் புதிய பண்ணைகளை அமைக்க எனது தலைமையிலான அரசு உத்தரவிட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில், திருப்பூர், அரியலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 3 மாவட்டங்களில் 2 கோடி ரூபாய் செலவில் புதிய தோட்டக்கலைப் பண்ணைகள் அமைக்கப்படும்.

அதிகரித்து வரும் வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி தேவைகளை கருத்தில் கொண்டு, எனது தலைமையிலான அரசால் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலை, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈச்சங்கோட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் வாழவச்சனூர் ஆகிய 3 இடங்களில் புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளன. இந்த 3 கல்லூரிகள் மற்றும் மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில், 49 கோடியே 37 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் மற்றும் தேர்வு மையங்கள் ஆகியவை கட்டப்படும். இவ்வாறு முதல் அமைச்சர் பேசினார்.



## வாழ்வில் வசந்தம் உருவாக....

சூரியனுடைய அருளைப் பெற விரும்புபவர்கள் சூரிய திசை, சூரிய புத்தி நடப்பவர்கள், சூரிய வழிபாட்டைத்தினமும் மேற்கொள்வதோடு, ஞாயிற்றுக்கிழமை சூரிய ஹோரை நேரத்தில் கோதுமை தானமும், ஏழு குதிரைகளுக்கு ஏழு கைப்பிடி கொள்ளும் தானம் கொடுத்து வழிபட்டு வந்தால் வாழ்வில் வசந்தம் உருவாகும்.



# உணவு ஒவ்வாமை

**சி**ல வகைப் பூச்சிகளும், கம்பளிப் புழு போன்றவையும் நம் உடல் மீது விழுவ தால் மட்டும் ஒவ்வாமை எனப்படும் அலர்ஜி ஏற்படுவதில்லை. நாம் சாப்பிடுகின்ற பல்வேறு மருந்துகளுக்கும் ஒவ்வாமை ஏற்படுவதைப் பார்த்திருக்கிறோம். இதேபோன்றே நம் தினமும் உட்கொள்கின்ற எல்லா உணவுமே நமக்குச் சேர்வதில்லை. சில வகை உணவுகள் நமக்குப் பிடிப்பதில்லை. அதாவது எல்லா உணவும் எல்லாருக்கும் ஒத்துக் கொள்வது இல்லை. இப்படி அலர்ஜியை உண்டாக்கும் உணவுகளில் முக்கியமானவை, முட்டை வகைகள், மீன் வகைகள், பல்வேறு பால் மற்றும் பால் சம்பந்தப் பட்ட பொருட்கள்.

**அறிகுறிகள் :** ஒருவருக்கு அவர் சாப்பிட்ட உணவிற்கு அலர்ஜி உள்ளது என்பதை மூக்கிலிருந்து நீர் ஒழுக்குதல், ஆஸ்துமா தொந்தரவு, அரிப்பு, தோலில் மாற்றங்கள், தலைவலி, குமட்டல், வாந்தி, வயிற்று வலி, ஜீரணமாகாமை, வயிற்றோட்டம் போன்ற பல்வேறு தொந்தரவு களும் ஏற்படுவதிலிருந்து அறியலாம்.



பேராசிரியர்
டாக்டர் எஸ். முத்துசெல்லக்குமார் எம்.டி.

எவ்வாறு ஏற்படுகிறது? பெரும்பாலும் முட்டை, பால் மற்றும் மீன் ஆகியவை சரிவர சமைக்கப்படாத போது.. அதிலுள்ள புரோட்டீன்... இரத்தத்தில் கலக்கின்ற போது. . விலங்குகளின் புரோட்டீனுக்கு எதிராக வினை ஏற்படுகிறது. இதனால் தான் அலர்ஜி நிலை ஏற்படுகிறது. இந்த உணவுகள் நன்றாகச் சமைக்கப்படுகின்ற போது, அதிலுள்ள புரோட்டீன் வேறு நிலைக்கு மாற்றப்படுவதால், அதிகம் பாதிப்பு ஏற்படுவதில்லை.

**சிகிச்சை முறை :** இப்படி சரியாக சமைக்காத உணவினால் வருகின்ற அலர்ஜியினைத் தடுப்பதற்கு எந்தெந்த உணவுகள் நோயாளிக்குப் பிடிக்கவில்லையோ அதை ஒவ்வொன்றாக அறிந்து தவிர்க்க வேண்டும். அலர்ஜியின் தன்மைக்கேற்ப நோயைச் சரி செய்ய சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

பாதிப்பு சிறிதாக இருந்தால் அலர்ஜியைப் போக்க ஆன்திஹிஸ்டாமைன் வகையைங்ச சேர்ந்த மருந்துகளைக் கொடுக்க வேண்டும்.

சிலருக்குக் கடல் மீன்களான ஜெல்லி மீன்கள், சாப்பிடுவதால் அலர்ஜியின் தன்மை சுவாசக் குழாய்களைச் சுருங்க செய்து உயிரிழப்பிற்கே கூட காரணமாகி விடும். இவர்கள் உயிரைக் காப்பாற்ற அட்ரீனலின் மற்றும் ஸ்டிராய்ட மருந்துகள் தேவைப்படும். சிலருக்குச் சுவாசத்தை திரும்ப உண்டாக்க மூச்சுக்குழலில் அறுவைச் சிகிச்சை போன்ற சிகிச்சைகள் கூட தேவைப்படும்.

இவர்களை அவசர சிகிச்சை பிரிவில் கவனித்து நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம், சுவாச அளவு, சிறுநீர் வெளியேறும் அளவு போன்றவற்றைத் தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும்.

# உண்மையைத் தேடிய ஆசிரியர்

1908 ல் எம்.ஏ. படிப்புக்காக ராதாகிருஷ்ணன் சமர்பித்த தி எதிக்ஸ் ஆஃப்தி வேதாந்தா அண்ட் இட்ஸ் மெட்டாஃபிஸிக்கல் பிரீசபோஸிஷன்ஸ் என்கிற ஆய்வேடு அவரது முதல் நூலாக வெளியானது. 1911ல் சென்னை மாநிலக் கல்லூரியில் உதவிப் பேராசிரியர் ஆனார். அவர் இந்தியத் தத்துவ வகுப்பெடுக்கும் முறையால் ஈர்க்கப்பட்டுப் பிற கல்லூரி மாணவர்களும் மாநிலக் கல்லூரிக்கு வந்து அவருடைய உரையை ஆர்வத்தோடு கேட்பார்கள்.



1918 முதல் 1920 வரை மைசூர் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1920 ல் கல்கத்தா பல்கலைக் கழகத்துக்குப் பணியாற்றப் புறப்பட்ட போது அவர் அமர்ந்திருந்த குதிரை ரதத்தை அவருடைய மாணவர்களே பிரியத்துடன் இழுத்துச் சென்றனர்.

1927 ல் ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் உரை நிகழ்த்திய அவர் 1931 ல் அதன் துணைவேந்தரானார். 1936 முதல் 1938 வரையிலான மூன்று ஆண்டுகள் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் கீழ்த்திசைச் சமயங்கள் பிரிவில் பேராசிரியராகப் பணி புரிந்தார். 1939 ல் வாரணாசிப் பல்கலைக் கழகத் துணைவேந்தரானார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கும் துணைவேந்தராக இருந்துள்ளார்.

ஆசிரியரின் மகத்துவத்தை இந்தியச் சமூகம் உணர வைத்தார் அவர். சமஸ்கிருத வாக்கியங்கள் விரவப்பெற்ற அவருடைய ஆங்கிலச் சொற்பொழிவுகள் கேட்பவரை ஈர்க்கும் காந்தத் தன்மை வாய்ந்தவை. ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் அவர் ஆற்றிய உரையான உலக நாகரிகத்தை வளர்த்ததில் தத்துவத்தின் பங்கு லண்டன் - மான்செஸ்டர் பல்கலைக் கழகங்களில் ஆற்றிய உரைகள் ஓர் இலக்கிய வாதியின் பார்வையில் வாழ்க்கை என்ற தலைப்பில் நூல்களாக வெளிவந்தன.

வேறுபாடுகளைத் திறந்த மனப்பான்மையோடு ஏற்றுக்கொள்வதே மக்களாட்சியின் மாண்பாகக் கருதிய அவர், ஜவஹர்லால் நேருவின் கோரிக்கையை ஏற்று இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவரானார். இதன் மூலம் அரசியல் சாராத, தத்துவப் பேராசிரியர் ஒருவர் முதன்முறையாக இப்பதவியில் அமர்ந்தார்.

தனது 21 வயதில் தத்துவப் பிரிவில் ஆசிரியப் பணியைச் சென்னை மாநிலக் கல்லூரியில் தொடங்கிய ராதாகிருஷ்ணனின் ஆசிரியப் பணியானது 40 ஆண்டுகள் நீண்டது. 1909 முதல் 1948 வரை மாணவர்களிடம் சர்வ தேச அளவில் உரையாடிக் கொண்டே இருந்தவர்.

இன்று சர்வ பள்ளிகளிலும் பெருமளவு மறக்கப்பட்ட ஆளுமையான சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் என்கிற அந்த அறிஞரின் பங்களிப்புகளும் செயல்பாடுகளும் இன்றைய இளம் தலைமுறையினருக்கு ஒரு மெய்யான சொர்க்கம்.

# ரோந்து பணியில் சிறப்பாக பணியாற்றிய 6 போலீசாருக்கு - கமிஷனர் பாராட்டு



திருட்டு, வழிப்பறி கொள்ளை சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை கைது செய்யும் போலீசார் மற்றும் ரோந்து பணியின் போது குற்றவாளிகளை கையும், களவுமாக கைது செய்யும் போலீசாரை கமிஷனர் டி.கே. ராஜேந்திரன் வாரந்தோறும் நேரில் அழைத்து வெகுமதி வழங்கி பாராட்டுவதை வழக்கமாக கொண்டுள்ளார். அதன்படி ரோந்து பணியின் போது இரு சக்கர வாகனங்களை திருடிய 6 குற்றவாளிகளையும், வழிப்பறியில் ஈடுபட்ட 2 குற்றவாளிகளையும் பிடித்த 6 போலீசாரை கமிஷனர் டி.கே. ராஜேந்திரன் வெகுமதி வழங்கி பாராட்டினார். அப்போது கூடுதல் கமிஷனர்கள் சி.ஸ்ரீதர் (வடக்கு), கே. சங்கர் (தெற்கு) ஆகியோர் உடன் இருந்தனர்.

தலைமை செயலக காலனி போலீஸ் ஜி. பொன்னு வேல், திருவல்லிக்கேணி போக்குவரத்து இன்ஸ்பெக்டர் சந்திரமவுலி, துரைப்பாக்கம் போலீஸ் வி.எஸ். பிரதீப், ஊர் காவல் படை வீரர் சி. சத்யராஜ், அண்ணாநகர் போலீஸ் ராஜி, ஆதம்பாக்கம் போலீஸ் அந் தோணி அகியோர் கௌரவிக் கப்பட்டனர்.

# குற்றச் சம்பவங்களை தடுக்க

## பொதுமக்களுடன் போலீசார் ஆலோசனை



மாதவரம் போலீஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அடிக்கடி குற்றச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த குற்றச் சம்பவங்களை தடுக்க மாதவரத்தில் பொதுமக்களுடன் போலீசாரின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாதவரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சங்கர் தலைமை தாங்கினார். இதில் குடியிருப்போர் நலச் சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாதவரம் துணை கமிஷனர் ராஜேந்திரன் கலந்து கொண்டு பேசும்போது, குற்றச் சம்பவங்க்ளை தடுக்க போலீசாருக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் அனைவரின் வீடுகள் மற்றும் வணிக வளாகங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்த வேண்டும் என கேட்டுக் கொண்டனார். இதில் மாதவரம் உதவி கமிஷனர் ஜெயசுப்பிரமணியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.


PUBLIC VIGILENCE COUNCIL TAMILNADU

பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு

தலைவர் லயன் எஸ்.மோகன் B.A,B.L.

செல் : 81220 66228, 94440 66228

நிறுவனர் / செயலாளர் : இ.செல்வராஜ்,

செல் : 94444 06321, 98841 99387,

80, கோனிகா காம்ப்ளக்ஸ் 2வது மாடி, தம்புசெட்டி தெரு, சென்னை - 1










**28.8.2016 அன்று, பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு - இணையதள துவக்க விழாவில் பரதநாட்டியம், கவியரங்கம், கருத்தரங்கம், உலக சாதனையாளர் அருண் அவர்களின் நிகழ்ச்சி நடைபெற்றது.**



பொதுமக்கள் விஜிலென்ஸ் கவுன்சில் தமிழ்நாடு – இணையதள துவக்க விழாவில் மாண்புமிகு நீதியரசர் இ.பத்மநாபன் (ஓய்வு, சென்னை உயர்நீதிமன்றம்) அவர்கள் வழக்கறிஞர் எம். தாமோதரன், டாக்டர் ஜி.ராஜாகுமார், ஏ.தா. இளங்கோவன், டாக்டர் லட்சுமிராஜாராம், கே.ஜெய்சங்கர், கே.எஸ். கணேஷ், சி.வி.ஆனந்தகுமார் ஆகியோருக்கு நினைவு கேடயம் வழங்கி கௌரவித்தார்.



Owned & Published by E. Selvaraj from No.352, Sammanthipuram, Vyasarpadi, Chennai - 600 039, and Printed by R. Gani (N. Rowthargani), at Fine Offset Prints, No. 15, Seven Wells Street, Ch - 600 001, Editor E. Selvaraj, Cell : 94444 06321

Registered with Registrar of News Paper of India Under No.TNTAM/2002/7759
R.Dis.No. 876/07 Posted at Egmore RMS/ R.No.TN/CCN/334/2014-2016
WPP License No. TN/PMG/ (CCR)/WPP-346/2014-2016
Published on 1st day of Every Month Posted on 7th day of Every Month